**UNIVERSITY OF PERADENIYA**
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 200 මට්ටම - 2023
இளங்கலைமாணிப் பட்ட பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 200 ஆவது தேர்ச்சி மட்டம் - 2023
**Bachelor of Arts (External-New Syllabus) Examination 200 Level - 2023**

## ECNE 202: பருநிலைப்பொருளியற் கோட்பாடு (Macroeconomic Theory)

කාලය පැය (03) තුනයි.
நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்
Time: three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න **05** කට පිළිතුරු සපයන්න.
**05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**
Answer **05** questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 07 කි
**இவ் வினாப்பத்திரத்தில் 07 வினாக்கள் உள்ளன .**
There are 07 questions in the question paper.

---

1 a) பருநிலைப்பொருளியல் (பேரினப்பொருளியல்) என்றால் என்ன? அதன் பண்புகளை விளக்குக. (05 புள்ளிகள்)

b) பருநிலைப்பொருளியலின் பிரதான நோக்கங்களை ஆராய்வதுடன் அவற்றின் சாத்தியமான விட்டுக்கொடுப்புக்களையும் ஆராய்க. (15 புள்ளிகள்)

2. a) மொத்தக் கேள்வியின் வட்டிவீத உணர்திறனும் பெருக்கியும் எவ்வாறு IS வளையியின் சரிவினைப் பாதிக்கின்றது என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

b) IS-LM மாதிரியுருவினைப் பயன்படுத்தி மொத்தக்கேள்வி (AD) வளையியைத் தருவிப்பதுடன் அதனை விளக்குக. (08 புள்ளிகள்)

c) ஏன் நீண்டகால மொத்த நிரம்பல் வளையிகள் (AS) செங்குத்தாகவும் குறுங்கால மொத்த நிரம்பல் வளையிகள் மேல்நோக்கிய சரிவுடைய தாகவும் வரையப்படுகின்றன. காரணங்களை ஆராய்க. (06 புள்ளிகள்)

3. a) மொத்தக் கேள்வி வளையி ஏன் கீழ்நோக்கிய சரிவுடையதாகக் காணப்படுகின்றது? காரணங்களைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

b) மொத்தக் கேள்வியையும் மொத்த நிரம்பலையும் பாதிக்கும் காரணிகள் யாவை? வரைபில் காண்பித்து விளக்குக. (08 புள்ளிகள்)

c) ஒரு மேல்நோக்கிய சரிவுடைய மொத்த நிரம்பல் வளையி எவ்வாறு பெருக்கியினைப் பலவீனப்படுத்துகின்றது என்பதை விளக்குக. (07 புள்ளிகள்)

4. a) நிரந்தர வருமான நுகர்வுக் கோட்பாட்டினை நுணுக்கமாக மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

b) நுகர்வுக் கோட்பாடுகளான முழு வருமானக் கருதுகோள் மற்றும் வாழ்க்கைச் சுழற்சிக் கருதுகோள் குறித்த ஓர் ஒப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்க. (10 புள்ளிகள்)

5 a) பணவீக்கமானது மெய் வெளியீட்டினதும் வேலைவாய்ப்பினதும் வீழ்ச்சியுடன் இணைந்திருக்கலாம் என செலவுத் தூண்டல் பணவீக்கக் கோட்பாடு குறிப்பிடுகின்றது. இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையினை விளக்குக. (10 புள்ளிகள்)

b) வேலையின்மையானது ஏன் ஒரு பிரச்சினையாகக் கருதப்படுகின்றது? இலங்கையின் தற்போதைய வேலையின்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு என்ன கொள்கை நடவடிக்கைகள் பயன்படுத்தப்படலாம்? (10 புள்ளிகள்)

6. a) AD மற்றும் AS வளையிகளைப் பயன்படுத்தி வருமான மட்டம் மற்றும் பொதுவிலை மட்டங்களின் மீதான ஒரு விரிவாக்கல் நாணயக் கொள்கையின் குறுங்கால மற்றும் நீண்டகால விளைவுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

b) AD மற்றும் AS வளையிகளைப் பயன்படுத்தி வருமான மட்டம் மற்றும் பொதுவிலை மட்டங்களின் மீதான ஒரு விரிவாக்கல் இறைக் கொள்கையின் குறுங்கால மற்றும் நீண்டகால விளைவுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றில் எவையேனும் **நான்கிற்கு** சிறுகுறிப்புகள் எழுதுக

a. திரவப் பொறி
b. வெளித்தள்ளல் விளைவு
c. உத்தேசநோக்கம் குறித்த பணத்திற்கான கேள்வி
d. பிலிப்ஸ் வளையி
e. தொகைக் கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (தலா 05 புள்ளிகள்)